## "வாழ்வின் வளம்"

*சீரிலங்கும் யாழ் நகரை அடுத்து இருக்கும் சிற்றூராகிய நெடுந்தீவு என்னும் ஊரில் வாழ்ந்த வேலுப்பிள்ளை பூரணம் அவர்களின் மூத்த புதல்வராவர்.*

*இவர் தனது ஆரம்பம் முதற் கொண்டு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று முடித்துக் கொண்டு 1962 இல் கொழும்பு மாநகரில் திகழும் சுப்பீரியர் பழையகாட் என்னும் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்து பின்பு முகாமையாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில், யோகேஸ்வரியை மணம்புரிந்த காரணத்தினால் வட்டுக்கோட்டை வாந்தார்.*

*1972 இல் யாழ் நகரில் இருக்கும் கணேசன் புடவை மாளிகையிலும் முகாமையாளராக கடமையாற்றிக் கொண்டு இருந்தார். இருவரும் இனிதே வாழ்ந்த இல்லறப் பயனாய் கிருபானந்தன், சசியானந்தன் என்னும் இரு ஆண்மக்களை பெற்று மகிழ்ந்தனர். இப்படி இனிதே வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் 1983 இல் நோய்வாய்ப்பட்டு இருந்தார். அப்படி இருக்கும் வேளையில் அன்னாரின் மைத்துனர்களின் உதவியினால் இவரின் மூத்த புதல்வர் மா. கிருபானந்தன் ஜேர் மனி நாடு சென்று பின்பு சிவசுப்பிரமணியம் லீலாவதி தம்பதி களின் புதல்வி வசந்தகுமாரியை விவாகஞ் செய்து மனோஜன் என்னும் புதல்வனை பெற்றுள்ளார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் இளைய புதல்வர் மா. சசியானந்தன் தனது தமையனாரின் உதவியினால் ஜேர்மனி நாடு சென்றுள்ளார். இவருக்கு சிவபாதசுந்தரம், திலகவதியின் புதல்வி கவிதாவை நிச்சயார்த்தம் செய்யப்பட்டுள்ளது.

இப்படி வாழ்வில் இன்பதுன்பங்களை சந்தித்த அன்னாரை மனைவி, பிள்ளைகள், மைத்துனர் சீரோடும் சிறப்போடும் வைத்திருந்தனர். அன்னார் தனது 55 வது வயதில் இவ்வுலகை நீத்தார்.

அன்னாரின் ஆன்மா இறை நிழலில் இன்புற்றிருப்பதாக.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

நல்லாண்மை யென்ப தொருவதற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி



எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டு
அவர்கள் மரணித்தலை
ஓடோடி வந்து
உதவிய அயலவர்க்கும்,
அஞ்சலிப்பிரசுரம் அச்சிட்டுப்
பிரசுவித்து எம் துயரில்
பங்கு கொண்ட இந்து
வாலிபர் சங்க உறுப்பினர்,
கணேசன் ஜவுளி மாளிகை,
சிவகணேசன் புடவையகம்
உரிமையாளர்கள், ஊழியர்கள்
அனைவருக்கும், தபால்,
தந்தி, தொலைபேசி
மூலம் எம் துயர்
களைய முயன்ற தூரத்து
அன்பர்கட்கும்,
இன்றைய இன் நிகழ்வுகள்
குறைவின்றி நிகழ உதவிய
அனைவர்க்கும்
எம் இதய நன்றிகள்.

வட்டுக்கோட்டை. குடும்பத்தினர்.

... பதிப்பகம்,430, ... துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org